கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி:11.01.2024

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வணிககாப்பகத்தில் தேசிய தொழில் முனைவோர் தினவிழா 2024**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தொழில்நுட்ப வணிககாப்பகத்தில் தொழில் முனைவோர்களின் பங்களிப்பு மற்றும் சாதனைகளை கௌரவிக்கும் நோக்கத்தோடு 11.01.2024ம் தேதி துளிர் நிறுவன தினம் கொண்டாடப்பட்டது. இந்திய பிரதமர் திரு.மோடி அவர்களின் ஆலோசனைப்படி தேசிய துளிர் நிறுவன வாரம் ஜனவரி 10 முதல் 16 ம் தேதி வரை ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது. வேளாண் வணிகமேம்பாட்டு இயக்கக இயக்குனர் முனைவர்.E.சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அவரது உரையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தொழில்நுட்ப வணிககாப்பகம் வேளாண் சார்ந்த துளிர் நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மற்றும் நிதியுதவி ஊக்குவிப்பதில் முன்னோடியாக திகழ்கிறது. இதனால் வேளாண் துறையில் புதிய தொழில்நுட்பங்கள் சாா்ந்த தொழில்கள் வளர்ச்சியடைவதோடு வேளாண் பட்டதாரிகள் தொழில் முனைவோர்கள் வேலை வாய்ப்புகளை உருவாக்குபவர்களாகவும் மேம்படுவார்கள் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமையுரை ஆற்றிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், முனைவர் வெ.கீதாலெட்சுமி அவர்கள் வேளாண் தொழில் முனைவோருக்கு தேவையான மத்திய, மாநில அரசின் ஊக்குவிக்கும் நலத்திட்டங்களை ஒரே குடையின் கீழ் செயல்படுத்தும் நிறுவனமாக இப்பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வணிககாப்பகம் திகழ்கிறது என்றார். மேலும் இக்காப்பகம் புதிய தொழில் தொடங்குவதற்குகான ஆர்வத்துடன் வருபவர்களுக்கு தேவையான தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், தேவையான சான்றிதழ், தரக்கட்டுப்பாடு, நிதி ஆலோசனைகள்ஆகிய உதவிகளை அளித்து 500க்கும் மேற்பட்ட வேளாண் தொழில் முனைவோர்களை உருவாக்கியுள்ளது.

மேலும் மத்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சம், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு துறை திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட4 தொழில் முனைவோருக்கு ரூ.75லட்சம் SISFS கடனுதவிக்கான காசோலையை துணைவேந்தர், முனைவர் வெ.கீதாலெட்சுமி அவர்கள் வழங்கி வாழ்த்து கூறினார். தொழில் முனைவோர் இந்த திட்டத்தின் நிதியை தங்களின் தயாரிப்பு பொருட்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தி கொள்வர்.

இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் திரு.G. திருமுருகன், வேளாண் இணை இயக்குனர் திரு.G.பெருமாள்சாமி, நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு.C.திருமலாராவ் மற்றும் சிறு குறு தொழில் நிறுவன கோவை கிளை உதவி இயக்குனர் திருமதி.B.கயல்விழி மற்றும் இந்திய யூனியன் வங்கி மேலாளர் திரு.மகேஷ், இயற்கை சான்றிதழ் ஆய்வாளர் திரு.சாம் ரவேல் மற்றும் M/s.Idea Guru Solutions நிறுவனர் திரு.V.சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு அரசின் தொழில் முனைவோருக்கான திட்டங்களை பற்றி உரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயக்குனர்கள் முதன்மையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். தொழில் வணிககாப்பகத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி அவர்கள் திரு.A.V.ஞானசம்பந்தம் நன்றியுரை ஆற்றினர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**